**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.**
**O.S.No.205/2016**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி திருமதி. சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இப்ராகிம் ஷெரிப் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சர்தார் பாஷா | கிராமம் | : | |
| வயது | : | 47 | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**பி.வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 4ம் பிரதிவாதியின் அதிகார முகவர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

| தேதி | ஆவணங்கள் விவரம் | ஆவண எண் |
|---|---|---|
| 05.02.2021 | எனது பெயரிலுள்ள சிறப்பு அதிகார பத்திரம் அசல் | பி.வா.சா.ஆ.1 |
| 27.03.2026 | 1ம் வாதியடன் எனது தாயார் மற்றும் நான் போட்டுக் கொண்ட சமரச மெமோவின் அசல் | பி.வா.சா.ஆ.2 |

இத்துடன் முதல் விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது

**வாதி தரப்பு பி.வா.சா 1 குறுக்க விசாரணை**

1. தாவா சொத்து மற்றும் பிராது பற்றிய விவரங்கள் நன்கு தெரியும். எனக்கு தாவா சொத்தின் அடி மனை வாதி கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா பிராதில் குறிப்பிட்டு பி அட்டவனை சொத்தில் நாங்கள் குடியிருந்தோம். வாதியிடம் கட்டிடத்திற்கான பிரதிபலனை பெற்று அந்த சொத்தை அடி மனையுடன் சேர்த்து வாதி கோவிலில் அரங்காவல் என்ற

நிலையில் 1ம் வாதி அறங்காவலரிடம் ஒப்படைத்துவிட்டோம். மேற்படி ஒப்படைப்பு எந்த ஒரு கட்டாயம் இன்றி எனது தாயார் மற்றும் நான் சேர்ந்து முடிவெடுத்து மனப்பூர்வமாக சொத்தை ஒப்படைத்துவிட்டோம். தாவா படி தீர்ப்பாக வேணண்டுமென்றால் ஏற்கனவே கட்டிடத்தின் பிரதிபலனை பெற்று சொத்தின் அடிமனையுடன் சேர்த்து சொத்தின் சுவாதீனத்தை ஏற்கனவே ஒப்படைத்துவிட்டோம்.